1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் 15-4-1990—இல் தண்ணீர் திறந்துவிட்டிருக்கவேண்டும். அப்படி திறந்து விடாததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று கீழ் பவானிக்குத் தண்ணீர் வருகிற பில்லூர் அணைக்கட்டில் இப்போது ஜெனரேட்டர் ரிப்பேர் ஆகி இருக்கிறது. 'மெய்ன் டெனன்ஸ்' வேலையும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. எனவே 15 நாட்களுக்குள்ளாக தண்ணீர் விடுவதற்கு சாத்தியம் இல்லை என்று மின்வாரியத்துறை தெரிவித்திருக் கிறது. ஆக 1-5-1990 வரை பில்லூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இப்போது காளிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. எனவே 1-5-1990 முதல் அரக்கன் கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் தண்ணீர் விட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். பில்லூர் அணைக் கட்டைப் பொறுத்தவரையில் மின் வாரியம் கேட்டுக்கொண்ட தற்கிணங்கத்தான் பதினைந்து நாட்களுக்குத் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளி வைக்க நடவடிக்கைகள் எடுத்திருக் கிறோம். அதிலே கூட 10 நாட்கள்தான் பாக்கி இருக்கின்றன. எனவே 1—5—1990—ல் தண்ணீர் திறந்துவிடப்படும்.

(ஆ) ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே உள்ள பயிர்களைக் காப்பாற்ற தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. எஸ். டேனியேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடர்ந்து பெய்த பலத்த மழை காரணமாக ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் சிவகளை, பெருங்குளம் ஆகிய பாசனப் பகுதி களில் நெற்பயிர் சுமார் 5000 ஏக்கர் அழிந்து நாசமாகி உள்ளது. அதேபோல் ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர் ஆகிய குளத்துப் பாசனப் பகுதிகளில் கிட்டத்தட்ட 2000 ஏக்கர் நெற்பயிர் பூச்சியினால் தாக்கப்பட்டுள்ளது, இந்த ஆண்டு பழங்குடியினர் விவசாயத்திற்காக அட்வான்ஸ் கார் விவசாயத் திற்காக ஸ்ரீவைகுண்டம் வடக்கால் பகுதியில் ஆறுமுகமங்கலத் திற்கும் தென்கால் பகுதியில் கடப்பா ஆத்தூர் குளத்திற்கு மட்டும் தான் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

10-10 மணி

கடந்த 1988-ஆம் ஆண்டு ஆளுநர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 50 அடி தண்ணீர் பாபநாசம் அணையில் நீர்மட்டம் இருந்தபோது கூட மருதூர் கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர், சிவகளை, பெருங்குளம் ஆகிய குளங்களுக்கும், மருதூர் மேலக்கால், வெள்ளூர் குளங்களுக்கும் அட்வான்ஸ் கார் விவசாயம் செய்வதற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்போது பாபநாசம் அணையில் 70 அடி நீர் மட்டமும் மணிமுத்தாறு

அணையில் 80 அடி நீர் மட்டமும் இருந்துகொண்டிருக்கிற நிலையில் விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று மருதூர் கிழக்கால், ஸ்ரீவைகுண்டம், பேரூர், சிவகளை, பெருங்குளம் ஆகிய குளங்களுக்கும், மருதூர்மேலக்கால், வெள்ளூர் ஆகிய குளங்களுக்கும் அதுபோல ஸ்ரீவைகுண்டம் வடக்காலில் இருக்கின்ற கொற்கை, பேய்குளம் ஆகிய குளத்துப் பகுதி விவசாயிகள் வாழை, கொடிக்கால் ஆகிய பயிர்களை விளைச்சல் செய்திருக்கிறபடியால் அவர்களுடைய பயிர்களையும் காப்பாற்ற தண்ணீர் வழங்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி பாசனத்தின் அட்வான்ஸ் கார் பயிர் என்பது ஒருவகை. இதில் பெரும்பாலும் ஸ்ரீவைகுண்டம் தண்ணீருடன் இரண்டு கால்வாய் பகுதிகளில்தான் அட்வான்ஸ் காருக்கு தண்ணீர் விடுவது வழக்கம். இந்த அட்வான்ஸ் காருக்கு தண்ணீர்விட வேண்டுமானால் 1-4-1990 முதல் தண்ணீர் விட்டிருக்கவேண்டும். ஆனால் இதற்கு என்று சில விதிமுறைகள் உண்டு. பாசனத்தில் இருக்கிற தண்ணீர், காருக்கு இருக்கிற தண்ணீருடைய நிலைமைக்கு ஏற்ப, அடுத்துவருகிற கார் பயிருக்கு நாற்று நடுவதற்காக 500 மில்லியன் கன அடியை நிறுத்தி வைத்துவிட்டு, அதை அடுத்து சிதம்பரனார் மாவட்டத்தில் இருக்கிற சில தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் விடுவதற்காக ரெசர்வ் ஆக 300 மில்லியன் கன அடி தண்ணீரை நிறுத்தி விட்டு, ஆக, 800 மில்லியன் கன அடி தண்ணீரை நிறுத்திவிட்டு, மீதி பாபநாசம் அணைக்கட்டில் இருக்கிற தண்ணீரைத்தான், நிலைமைக்கு ஏற்ப அட்வான்ஸ் காருக்கு விடுவது வழக்கம். அப்படி விடுகிறபோது கூட, எல்லா தண்ணீரையும் நம் இஷ்டப்படி விட முடியாது. அதற்கு என்று சில விதிகளை வகுத்து வைத்திருக்கிறோம். அதாவது இருக்கிற தண்ணீரை எப்படி கொடுக்க வேண்டுமென்றால், பர்ஸ்ட் பிரையாரிட்டி 8,124 ஏக்கர். அவர்களுக்குக் கொடுத்தது போக செக்கண்ட் பிரையாரிட்டி 962 ஏக்கர். அவர்களுக்குக் கொடுத்தது போக மிச்சம் தண்ணீர் இருந்தால் தேர்ட் பிரையாரிட்டி 12,027 ஏக்கர். அதற்கும் கொடுத்துவிட்டு தண்ணீர் மிச்சம் இருந்தால் போர்த் பிரையாரிட்டி, மாண்புமிகு உறுப்பினர் சொன்னாரே மருதூர் கீழக்கால், மருதூர் மேலக்கால் அதிலே ஓர் 16,475 ஏக்கர். ஆக, பர்ஸ்ட் பிரையாரிட்டி கொடுத்து மிச்சம் இருந்தால் செக்கண்ட் பிரையாரிட்டி கொடுத்து, அதிலும் தண்ணீர் மிச்சம் இருந்தால் தர்ட் பிரையாரிட்டி கொடுத்து பிறகுதான் நான்காவது பிரையாரிட்டிக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பர்ஸ்ட் பிரையாரிட்டி, செக்கண்ட் பிரையாரிட்டி, தேர்ட் பிரையாரிட்டி இவ்வளவையும் தாண்டி, கடந்து நான்காவது இடத்தில் இருப்பவர்களுக்கு தண்ணீர் கொடுங்கள், பிரையாரிட்டி கொடுத்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று சொன்னால் இந்த மூன்று பிரையாரிட்டி களிலும் நிலங்களை வைத்திருப்பவர்கள் என்ன ஆவார்கள்

1990 ஏப்ரல் 18] [திரு. துரைமுருகன்]

என்பதைப் பார்க்க வேண்டும். இது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்துவிடும். அவர் இங்கே சொன்னார், கவர்னர் ஆட்சியிலே கொடுத்தார்கள் என்று. ஒன்றைத் தெளிவாக சொல்கிறேன். சில விதிமுறைகளை மாற்றியதால்தான் சில பிரச்சினைகள் அப்போதைக்கப்போது ஏற்படுகின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில், பாசன முறையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையோடு நீர் வழங்கப்படும். இதில் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு, வேறுபாடு எதையும் இந்த அரசு காட்டாது. இந்த அரசைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் சமமாக நீதியை வழங்கும் என்பதை மட்டும் தெரிவித்து, இந்த அரசு முறைப்படி நடக்கும், முறை தவறி நடக்க அனுமதி வழங்காது என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

(இ) சென்னை அண்ணா சாலை அஞ்சலகத்திற்கு முன் உண்ணா விரதம் இருக்கச்சென்ற தொழிற்சங்கத் தலைவர்களை அனுமதிக்காததால் ஏற்பட்டுள்ள நிலை.

10–15 மணி

திரு. எஸ்.ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் அண்ணா சாலையில் அஞ்சல் அலுவலகத்தின் முன்னால், இன்றைக்கு உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து, உண்ணா விரதம் இருக்க சென்றவர்களை, அவர்களோடு சென்ற தொழிலாளர்களைத் தடுக்க, தொழிற்சங்கத் தலைவர்களான மரியாதைக்குரிய திரு. கே. அந்தோணிப்பிள்ளை அவர்களையும், திரு. உமாநாத் அவர்களையும், திரு. வேல்முருகன் அவர்களையும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களையும் மற்றும் தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களையும், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற முயற்சியையும் தடுக்கின்ற வகையில், காவல் துறையைச் சார்ந்தவர்கள் அந்த மக்களை அங்கே செல்ல அனுமதிக்காமல் 5 நிமிடங்களுக்கு முன்னால் பொது மக்களைக் கலைப்பதற்காக லேசாக தடியடிப்பிரயோகம் செய்யும் அளவுக்கு இந்த நேரத்தில் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பல்வேறு அரசியல் ஊழியர்கள் போராட்டம் நடத்துகிற நேரத்தில் உண்ணாவிரதம் இருக்கிற நேரத்தில், ஆர்பாட்டம் செய்கிற நேரத்தில் காவல் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு விதி, 41-ஏ என்று ஒரு செக்ஷன் போட்டு, தொடர்ந்து பல ஆண்டுகளாக 15 நாட்களுக்கு அந்த விதியின்படி அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அனுமதி மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது என்று சொல்லி, நெருக்கடி காலத்தில் இல்லாவிட்டாலும்கூட ஆளுநர் ஆட்சிக்